

# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

திருச்சி மறைமாவட்டம்



மின்னிதழ்

செப்டம்பர் 2025




## செயலர் பக்கம்

அருள்பணி. சு. மரிய சூசை



### அன்பு உறவுகளே!

அம்மா என்றால் அன்பு. அம்மா என்றால் அக்கறை. அம்மா என்றால் கருணை. அம்மா என்றால் கரிசனை. அன்னையின் அரவணைப்பு அவளுடைய பிள்ளைகளுக்கு பாதுகாப்பு. அன்னையின் பாசம் அவளுடைய பிள்ளைகளுக்கு கவசம். இவ்வாறு அன்னையின் இருத்தலும் இயங்குதலும் அவளுடைய அன்பான பிள்ளைகளுக்கு ஆயிரம் யானை பலம் தருவதாய் இருப்பதை நாம் அறிகிறோம். இப்படிப்பட்ட அன்னையருள் சிறந்தவளாய், உயர்ந்தவளாய் ஊரும் உலகமும் போற்றிக் கொண்டாடும் புனிதமிக்க கன்னி மரியாவின் பிறப்பை இந்த செப்டம்பர் மாதம் 8 ஆம் தேதி கொண்டாடுகிறோம். கல்வாரியில் இயேசுவின் சிலுவையின் அடியில் நம் எல்லாருக்கும் தாயான புனித மரியா, இன்றும் தாய்க்குரிய பாசத்தோடும் பொறுப்போடும் நம் எல்லாரையும் நல்வழி நடத்துகிறார். நாம் நலமும் வளமும் மகிழ்வும் பெற்றிட நமக்காக தம் திருமகன் இயேசுவிடம் தொடர்ந்து பரிந்துபேசி மன்றாடுகிறார்.

அன்னைக்கு கரம் குவித்து அவளை வணங்குவோம்!
அன்னையோடு கரம் கோர்த்து அவள் வழிநடப்போம்!

# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

திருச்சி மறைமாவட்டம்

# யூபிலி ஆண்டு அறிவோம்

#15

## புனித கதவு @ புனித பேதுரு பசிலிக்கா



இந்த காட்சிகளைப் பார்த்து, தியானித்து, புனித கதவை கடந்து செல்லும் ஒவ்வொருவருக்கும், ' கடவுளின் பேரிரக்கம் மனிதனின் பாவநிலையை கடந்து வருகின்றது' என்ற நற்செய்தியின் மையக்கருத்தை உணர்த்தும், என்று மறைந்த கர்தினால் வெர்ஜிலோ குறிப்பிடுகிறார்.



முதல் பெற்றோரின் கீழ்ப்படியாமை | இயேசு பிறப்பின் அறிவிப்பு



இயேசுவின் திருமுழுக்கு | காணாமற்போன ஆடு உவமை | காணாமற்போன மகன் உவமை | முடக்குவாதமுற்றவரைக் குணப்படுத்துதல்



பெண் நறுமண தைலம் பூசுதல் | எழுபது தடவை ஏழு முறை மன்னித்தல் | பேதுரு மறுதலித்தல் | நல்ல கள்வன்



இயேசு தோமாவுக்குத் தோன்றுதல் | இயேசு சீடர்களுக்குத் தோன்றுதல் | சவுல் பவுல் ஆனார் | புனித கதவை திறத்தல்





#16
## புனித கதவு
2025 ஆம் ஆண்டில்...

2025 ஆம் ஆண்டின் யூபிலியை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 24/12/2024 அன்று, புனித பேதுரு பெரிய பசிலிக்காவிலுள்ள "புனித கதவைத்" திறந்து துவங்கி வைத்தார்.



அதன்பின் "புனித கதவு" மற்ற பசிலிக்காக்களில் பின்வரும் தேதிகளில் திறக்கப்பட்டன.



26/12/2024 - ரெபிபா நியூ காம்பிளக்ஸ் சிறைச்சாலை - திருத்தந்தை பிரான்சிஸ் திறந்தார்.

29/12/2024 - புனித இலாத்தரன் பெரிய பசிலிக்கா - கர்தினால் பால்டாசரே ரெய்னா திறந்தார்





01/01/25 - புனித மரியன்னை பெரிய பசிலிக்கா - கர்தினால் ரோலண்டாஸ் மாக்ரிகாஸ் திறந்தார்.

05/01/25 - சுவர்களுக்கு வெளியே அமைந்த புனித பவுல் பெரிய பசிலிக்கா - கர்தினால் ஜேம்ஸ் ஹார்வி திறந்தார்.



# பீடச் சிறார் யூபிலி மாநாடு - மணப்பாறை மறைவட்டம்




27.07.2025, ஞாயிறு அன்று திருச்சி மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழுவால் வழிநடத்தப்பட்ட பீடச் சிறார் யூபிலி மாநாடு மறைமாவட்ட ஆயர் மேதகு. ச. ஆரோக்கியராஜ் அவர்களின் தலைமையில் மணப்பாறை புனித லூர்தன்னை ஆலயத்தில் நடைபெற்றது.



**கொண்டாட்ட நிகழ்வுகள்:** காலை 10:15 மணிக்கு பீடச் சிறார் அனைவரும் பீடப்பணிக்கான சீருடையுடன் ஆலயத்தைச் சுற்றி யூபிலி சிறப்பு பவனியில் மகிழ்வுடன் பங்கெடுத்தனர். பின் ஆயர், அருள்பணியாளர்களுடன் அனைவரும் குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து ஆயரின் தலைமையில் மணப்பாறை மறைவட்ட பீடச் சிறாருக்காக சிறப்பு யூபிலித் திருப்பலி நடைபெற்றது. இத்திருப்பலியில் மணப்பாறை மறைவட்ட அதிபர் அருள்பணி. தாமஸ் ஞானதுரை, உதவிப் பங்குப் பணியாளர் அருள்பணி. சகாய ஆண்டோ, பணிக்குழு செயலர் அருள்பணி. மரியசூசை ஆகியோர் கலந்து கொண்டு பீடச் சிறாருக்காக செபித்தனர். திருப்பலி முடிவில் யூபிலி நினைவாக அனைத்து பீடச் சிறாரும் பீடப்பணி செய்கையில் அணிவதற்கான, ஆயரால் மந்திரிக்கப்பட்ட சிறப்பு சிலுவை பீடச் சிறாருக்கு அணிவிக்கப்பட்டது.
























மதியம் 12 மணிக்கு க. உடையாபட்டி பங்குப் பணியாளர் அருள்பணி. அருள் ராஜா அவர்கள் பீடச் சிறார் மாநாட்டின் சிறப்புரை வழங்கினார். பின்பு ஆண்களுக்கு இறையழைத்தல் ஊக்கவுரையை முத்தப்புடையான்பட்டி பங்குப் பணியாளர் அருள்பணி. ஜான் கிறிஸ்டோபர் அவர்களும். பெண்களுக்கு அருள்சகோ. அருள் பிரகாசி அவர்களும் வழங்கினார்கள். மதிய உணவுக்குப் பின் 2 மணிக்கு

"இயேசுவின் இறுதி இரவு உணவு" என்னும் தலைப்பில் பீடச் சிறார்களால் ஊமை நாடகம் நடிக்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் 10 பங்குகளிலிருந்து 123 பேர் கலந்து கொண்டனர். பின்னர் மறைமாவட்ட முதன்மை அருள்பணியாளர் பேரருள்பணி. அந்துவான் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இறுதியில் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. அனைவருக்கும் நன்றி பாராட்டி மாநாடு இனிதே நிறைவு பெற்றது.

மாநாட்டிற்கு இடம் கொடுத்த மணப்பாறை மறைவட்ட அதிபர், உதவிப் பங்குப் பணியாளர், சிறப்பு அழைப்பாளர்கள், மாநாட்டில் மிகவும் உதவிய வேதியர்கள், ஈடுபட்டு உழைத்த தன்னார்வ வேதியர்கள், உறுதுணையாக இருந்த அனைத்துப் பணியாளர்கள், மாநாட்டிற்கு தங்கள் பீடச் சிறார்களை அனுப்பிவைத்த பங்குப் பணியாளர்கள், அழைத்து வந்த அருள்சகோதரிகள், ஒருங்கிணைப்பாளர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றியும், பாராட்டும்.



**பங்கேற்பு விபரம்:**

**மணப்பாறை மறைவட்டம்:** ஆவாரம்பட்டி (14), க. உடையாபட்டி (15), கருங்குளம் (13), மலையடிப்பட்டி (19), மணப்பாறை (11), ந. பூலாம்பட்டி (13), ப. உடையாபட்டி (10), பாலக்குறிச்சி (11), பெரிய அணைக்கரைப்பட்டி (15), பெரிய குளத்துப்பட்டி (11), புத்தாநத்தம் (6), திருக்காவலூர் (10), குளத்தூரான்பட்டி (13), வையம்பட்டி (06).

**கீரனூர் மறைவட்டம்:** இலுப்பூர் (16), வயலோகம் (13).

இவ்வாறு மணப்பாறை மறைவட்டத்தின் 17 பங்குகளிலிருந்து 203 பீடச்சிறாரும், 26 ஒருங்கிணைப்பாளர்களும், கீரனூர் மறைவட்டத்தின் 2 பங்குகளிலிருந்து 29 பீடச் சிறாரும், 4 ஒருங்கிணைப்பாளர்களும் பங்கேற்றனர். ஆக மொத்தம் 19 பங்குகளைச் சேர்ந்த 232 பீடச் சிறாரும், 30 ஒருங்கிணைப்பாளர்களும் இந்த யூபிலி மாநாட்டில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் குருமாணவர்களுக்கான மறைக்கல்விப் பயிற்சி

ஜூலை 25 வெள்ளி, 28 திங்கள் ஆகிய இரு நாள்களும் மதியம் 2.00 மணி முதல் 4.00 மணி வரை புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் இறையியல் முதலாமாண்டு பயிலும் 22 மாணவர்களுக்கு மறைக்கல்வி போதிக்கும் முறை பற்றிய பயிற்சி கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு செயலர் தந்தை அருள்பணி. மரியசூசை அவர்களால் வழங்கப்பட்டது. தன்னார்வ வேதியர்கள் திரு. ஜானி, திருமதி. ஆஞ்சலா, செல்வி. அபானா ஆகியோரால் மறைக்கல்விப் பாடல்களும் மறைக்கல்வி விளையாட்டுகளும் கற்றுக்கொடுக்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை அருள்பணி. ரமேஸ் அந்தோனி அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார்.





## புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் குருமாணவர்களுக்கான மறைக்கல்விப் பயிற்சி





## தன்னார்வ வேதியர்களுக்கான யூபிலி கலைப்போட்டிகள்:




17.08.2025 ஞாயிறு அன்று பிற்பகல் 2 மணி முதல் 5.30 மணி வரை தன்னார்வ வேதியர்களுக்கான யூபிலி கலைப்போட்டிகள் திருச்சி நல்லாயன் நிலையத்தில் நடைபெற்றன. சிறப்பு விருந்தினராக அருள்பணி. மனோகர்தாஸ் அவர்கள் கலந்துகொண்டு தன்னார்வ வேதியர்களை பாராட்டி உற்சாகமூட்டினார். தன்னார்வ வேதியர்கள் 126 நபர்களையும் பங்குவாரியாக 8 குழுக்களாகப் பிரித்து நிலைக்காட்சி, நாடகம், பாடல், நடனம் ஆகிய நான்கு போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளின் மதிப்பீட்டாளர்களாக அருள்சகோ. அ. ஆலன்ராஜ், அருள்சகோ. ஜெ. அபிஸ் ரோஜின் அவர்களும் செயல்பட்டனர். நிலைக்காட்சியில் 7 குழுக்களைச் சேர்ந்த 40 நபர்களும், நாடகப் போட்டியில் 7 குழுக்களை சார்ந்த 38 நபர்களும், பாடல் போட்டியில் 7 குழுக்களைச் சேர்ந்த 32 நபர்களும், நடனப் போட்டியில் 7 குழுக்களைச் சார்ந்த 34 நபர்களும் பங்கேற்று தங்கள் கலைத்திறமைகளை வெளிப்படுத்தினர். கலைகள் வழியாக நற்செய்தி அறிவிக்கும் பணிக்கு இந்நிகழ்வு முன்னோட்டமாக அமைந்தது. செயலர் தந்தை அனைத்துப் போட்டியாளர்களின் உழைப்பையும் தியாகத்தையும் பாராட்டி நன்றி கூறினார்.

# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்
















# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்


























தன்னார்வ வேதியர்களுக்கான
யூபிலி கலைப்போட்டிகள்
17.08.2025




தன்னார்வ வேதியர்களுக்கான
யூபிலி கலைப்போட்டிகள்




தன்னார்வ வேதியர்களுக்கான




17.08.2025




தன்னார்வ வேதியர்களுக்கான




தன்னார்வ வேதியர்களுக்கான
யூபிலி கலைப்போட்டிகள்




தன்னார்வ வேதியர்களுக்கான
யூபிலி கலைப்போட்டிகள்




தன்னார்வ வேதியர்களுக்கான
யூபிலி கலைப்போட்டிகள்





தன்னார்வ வேதியர்களுக்கான
யூபிலி கலைப்போட்டிகள்






## தன்னார்வ வேதியர் அடிப்படைப் பயிற்சியின் ஐந்தாம் குழு தொடக்க விழா:

23-08-2025 சனிக்கிழமை அன்று மாலை 5 மணிக்கு தன்னார்வ வேதியர் அடிப்படை பயிற்சியின் ஐந்தாம் குழுவுக்கான தொடக்க அமர்வு திருச்சி நல்லாயன் நிலையத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மேதகு. ச. ஆரோக்கியராஜ் அவர்கள் இப்பயிற்சியைத் தொடங்கிவைத்து, பயிற்சியின் நோக்கம் குறித்து விளக்கிக் கூறினார். செயலர் தந்தை அவர்கள் வகுப்புகளின் விபரம், பயிற்சியின் அமைப்பு, ஒழுங்குமுறைகள், பாடத்திட்டம் பற்றி விவரித்தார். அன்றைய முதல் வகுப்பை ஆயர் அவர்களே எடுத்தார். இப்பயிற்சியில் 26 பொதுநிலையினரும், 27 அருள்சகோதரிகளும் கலந்துகொண்டனர்.

விவிலியப்பணி, மறைக்கல்விப்பணி, திருவழிபாட்டுப்பணி போன்ற ஆன்மிகப் பணிகளை பங்குகள், மறைமாவட்டம் ஆகிய தளங்களில் ஆர்வமுடனும் ஈடுபாட்டுடனும் நிறைவேற்ற உதவும் தன்னார்வ வேதியர்களை பயிற்றுவித்தலே இப்பயிற்சியின் நோக்கமாகும். எனவே இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு பயன்பெற திருச்சி மறைமாவட்டத்தைச் சார்ந்த ஆர்வமும், துடிப்பும் உடைய பணிக்குழு உறுப்பினர்கள், பெரியவர்கள், பணி ஓய்வில் இருப்பவர்கள் மற்றும் 12 ஆம் வகுப்பு முடித்து, திருவிவிலியம், மறைக்கல்வி, திருவழிபாடு ஆகியவற்றை பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வமுடைய அனைத்து பொதுநிலையினர், அருள் சகோதரிகள் அனைவரையும் இப்பயிற்சியில் கலந்துகொண்டு பயன்பெற அன்போடு அழைக்கிறோம். இப்பயிற்சி தொடர்ந்து 30 சனிக்கிழமைகளில் மாலை 5 மணி முதல் 7 மணி வரை நடைபெறும்.

## ஞாயிறு மறைக்கல்வி சந்திப்பு

17.08.25 அன்று துறைக்குடி, 31.08.25 அன்று எட்டுக்கால்பட்டி ஆகிய பங்குகள் பணிக்குழுச் செயலரால் சந்திக்கப்பட்டன. அன்றைய ஞாயிறு திருப்பலியை செயலர் நிறைவேற்றி, மறைக்கல்வியின் முக்கியத்துவம் குறித்து மறையுரை ஆற்றினார். திருப்பலிக்குப் பின்பு செயலர் பீடச் சிறாரையும், மறைக்கல்வி மாணாக்கரையும் சந்தித்து, அவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்தினார்.







**பணிக்குழுவின் செப்டம்பர் மாத நிகழ்வுகள்**

21.09.2025 – விவிலிய விழாக் கொண்டாட்டம், நல்லாயன் நிலையம்.

# பள்ளி மறைக்கல்வி, நன்னெறிக்கல்வி சந்திப்பு



**ST. MARY'S HIGH SCHOOL**



**ST. PHILOMENA'S HIGHER SECONDARY SCHOOL**

**AROCKIYA MADHA MATRICULATION HIGHER SECONDARY SCHOOL**



கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

திருச்சி மறைமாவட்டம்





# இரண்டு படங்களுக்கு இடையேயுள்ள 6 வித்தியாசங்களைக் கண்டுபிடித்து மகிழுங்கள்







